

தமிழ்நாடு முதலமைச்சர், திராவிட நாயாகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி திருவாரூரில் ரூ.13.27 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள 'கலைஞர் நூற்றாண்டு காய், கனி அங்காடி வளாகமத்தை' நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார். தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா, பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., வை.செல்வராஜ் எம்பி., மாவட்ட ஆட்சித்தலைவர் மோகனச்சந்திரன், மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, நகர்மன்ற தலைவர் புவனப்ரியா செந்தில், துணைத்தலைவர் அகிலா சந்திரசேகர் மற்றும் கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், பொதுமக்கள் ஆகியோர் உடனிருந்தனர்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.கழக சார்பில் நடைபெற்ற பொது உறுப்பினர்கள் கூட்டம் குன்றத்தூர் வடக்கு ஒன்றியம், பரணிபுத்தூரில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கலந்து கொண்டு உரையாற்றினார். அருகில் அவைத் தலைவர் த.துரைசாமி, மாவட்ட துணை செயலாளர்கள் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி, வெ.விசுவநாதன் ஆகியோர் உள்ளனர்.

### அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா. - பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.பங்கேற்பு!

# திருவாரூரில் "கலைஞர் நூற்றாண்டு காய், கனி அங்காடி வளாகம்"!

## அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார்!

திருவாரூர், மே 12

தமிழ்நாடு முதலமைச்சர், திராவிட நாயாகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும் துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் வாழ்த்துக்களுடனும் , திருவாரூர் நகராட்சி வார்டு எண்.25 பழைய தஞ்சை சாலையில் ரூ.13.27 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள 'கலைஞர் நூற்றாண்டு காய், கனி அங்காடி வளாகம்' மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா, பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., வை.செல்வராஜ் எம்.பி., மாவட்ட ஆட்சித்தலைவர் மோகனச்சந்திரன், மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, நகர்மன்ற தலைவர் புவனப்ரியா செந்தில், துணைத் தலைவர் அகிலா சந்திரசேகர் ஆகியோர் உடனிருந்தனர்.

இந்நிகழ்வில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்ததாவது :-

"திருவாரூர் என்பது எங்களையெல்லாம் உருவாக்கிய முன்னாள் முதல்வர்கலைஞர் அவர்கள் பிறந்த மண். திருவாரூர் மாவட்டத்திற்கு தேவையான அனைத்து வசதிகளையும் உடனுக்குடன் செய்து தந்தவர் முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள். கலைஞர் அவர்களின் வழியில் செயல்படும் தற்பொழுதுள்ள முதலமைச்சர் அவர்கள் மக்கள் நலனுக்கான பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறார்கள்.

நான்காண்டில், திருவாரூர் மாவட்டத்தில், நகராட்சி நிர்வாகத்துறையின் சார்பில், நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.12.90 கோடி மதிப்பீட்டில் 18 பணிகளும், நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.54 லட்சம் மதிப்பீட்டில் 5 பணிகளும், தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேமம்பாட்டு திட்டத்தின் கீழ் 43 பணிகள் (10.142 கி.மீ,) ரூ.10 கோடி மதிப்பீட்டிலும், நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (10.027 கி.மீ.) 37 பணிகள் ரூ.4.35 கோடி மதிப்பீட்டிலும், 15வது நிதிக்குழு மானியம் திட்டத்தின் கீழ் 57 பணிகள் ரூ.9.30 கோடி மதிப்பீட்டிலும், மாநில நிதிக்குழு மானிய திட்டத்தின் கீழ் 2 பணிகள் ரூ.66 லட்சம் மதிப்பீட்டிலும், மூலதன மானிய நிதியின் கீழ் 3 பணிகள் ரூ.2.21 கோடி மதிப்பீட்டிலும், இயக்குதல் மற்றும் பராமரித்தல் நிதியின் கீழ் 4 பணிகள் ரூ.0.17 கோடி மதிப்பீட்டிலும், தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் 2 பணிகள் ரூ.1.85 கோடி மதிப்பீட்டிலும், தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ரூ.2.07 கோடி மதிப்பீட்டில், 7 பணிகளும் முடிவுற்றுள்ளது.

அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் 1 பணி ரூ.78.15 கோடி மதிப்பீட்டிலும், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 8 பணிகள் ரூ.24.16 கோடி மதிப்பீட்டிலும், மூலதன மானிய நிதியின் கீழ் 1 பணி ரூ.4.06 கோடி மதிப்பீட்டிலும், பாதாளச்சாக்கடை திட்டத்தின் கீழ் 1 பணி ரூ.29.46 கோடி மதிப்பீட்டிலும், தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 3 பணிகள் ரூ.1.99 கோடி மதிப்பீட்டிலும் பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும், 2025-2026ஆம் நிதி ஆண்டிற்கு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2025-2026இன் கீழ் நகராட்சிக்குட்பட்ட 86 எண்ணிக்கை சாலைகளை ரூ.8.17 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ளது. கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2025-2026இன் கீழ் ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் குளங்கள் மேம்பாடு, ரூ.0.77 கோடி மதிப்பீட்டில் பூங்கா மேம்பாடு, ரூ.5.30 கோடி மதிப்பீட்டில் பேருந்து நிலைய மேம்பாடு மற்றும் ரூ.1.77 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி நடைபெறவுள்ளது. திருவாரூர் நகராட்சிக்கு மட்டுமின்றி, மன்னார்குடி நகராட்சியிலும் நகராட்சி நிர்வாகதுறையின் சார்பில் பல்வேறு பணிகள் நடைபெற்றுவருகிறது" என நகராட்சி நிர்வா கத்துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

தொடர்ந்து, திருவாரூர் நகராட்சியில் ரூ.16.30 கோடி மதிப்பீட்டில் நடைபெற்றுவரும் பழைய பேருந்து நிலைய மேம்பாடு பணிகளை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பார்வையிட்டார்.

அமைச்சர் முனைவர். டி.ஆர்.பி.ராஜா, வை.செல்வராஜ் எம்பி., மாவட்ட ஆட்சித் தலைவர் வ.மோகனச்சந்திரன், மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, ஒன்றியக்குழு முன்னாள் தலைவர் புலிவலம் ஏ.தேவா, நகர்மன்ற தலைவர் புவனப்ரியா செந்தில், துணைத் தலைவர் அகிலா சந்திரசேகர் நகர செயலாளர் பிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர் டி. செந்தில், நகர்மன்ற தலைவர்கள் கவிதா பாண்டியன், பாத்திமா பஷீரா, தலைமை செயற்குழு உறுப்பினர் ஆர்.எஸ். பாண்டியன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

### திருநெல்வேலி நெல்லையப்பர் திருக்கோயிலில்

# ரூ. 9.55 கோடி மதிப்பில் - புதிய வெள்ளித் தேர், மரத்தேர் மற்றும் தெப்பக்குளத் திருப்பணிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆய்வு செய்தார்!

நெல்லை, மே.12-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (11.05.2025) திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி நெல்லையப்பர் அருள்தரும் காந்திமதி அம்மன் திருக்கோயிலில் ரூ.9.55 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் புதிய வெள்ளித்தேர், சண்டிகேசுவரர் மரத்தேர் பணிகளையும், அம்மன் சன்னதி திருப்பணிகள் மற்றும் கருமாரி உருமாரி தெப்பக்குளத் திருப்பணிகளையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்து சமய அறநிலையத்துறையானது தன் ஆளுகைக்குட்பட்ட திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், திருத்தேர் மற்றும் திருக்குளங்களை சீரமைத்தல், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில் சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல் போன்ற பணிகளை செம்மையாக மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில் திருநெல்வேலி நெல்லையப்பர் அருள்தரும் காந்திமதி அம்மாள் திருக்கோயிலுக்கு ரூ. 4.85 கோடி மதிப்பீட்டில் 425 கிலோ கிராம் வெள்ளியை கொண்டு புதிய வெள்ளித்தேர், ரூ. 59 இலட்சம் மதிப்பீட்டில் சண்டிகேசுவரருக்கு புதிய மரத்தேர் உருவாக்கும் பணிகள், ரூ. 99 இலட்சம் மதிப்பீட்டில் காந்திமதி அம்மன் சன்னதி இரண்டாம் பிரகாரத்தில் கல்தூண்கள் சீரமைக்கும் பணி, ரூ. 1.61 கோடி மதிப்பீட்டில் அம்மன் சன்னதி மேல்தளத்தில் தட்டோடு பதிக்கும் பணி, டி.வி.எஸ். நிறுவனத்தின் மூலம் ரூ.1.51 கோடி மதிப்பீட்டில் கருமாரி உருமாரி தெப்பக்குளத்தினை சீரமைக்கும் பணிகள் என மொத்தம் ரூ. 9.55 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

இத்திருப்பணிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (11.05.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடிந்து பக்தர்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர துறை அலுவலர்கள், பொறியாளர்கள் மற்றும் திருத்தேர் ஸ்தபதிகளுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

இந்த ஆய்வின்போது இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் டாக்டர் இரா. சுகுமார், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அப்துல் வகாப், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் திருமதி பி.கவிதா பிரியதர்சினி, துணை ஆணையர் திருமதி ஏ.ஜான்சிராணி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



அண்ணா நகர் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் நான்காண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் செனாய் நகரில் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு பகுதி செயலாளர் ச.பரமசிவம் தலைமை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக தி.மு.க. அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கலந்து கொண்டு பேசினார். இந்நிகழ்ச்சியில் சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் கார்த்திக் மோகன், இளம் பேச்சாளர் சாய் ரித்திக் சக்திவேல் உள்ளிட்ட தி.மு.க.வினர் பொதுமக்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.








# தி.மு.க. இளைஞர் அணி



## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

### ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், இளைஞர் அணி மாவட்ட–மாநகர–மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து, கீழ்காணும் சட்டமன்றத் தொகுதிகளில் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. அதன் விவரம் வருமாறு:

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 15.05.2025 | திண்டுக்கல் கிழக்கு | ஆத்தூர் | அகரம் தாடிக்கொம்பு பேரூராட்சி | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, செல்வக்குமார் |
| 2 | 16.05.2025 | திண்டுக்கல் மேற்கு | ஒட்டன்சத்திரம் | கள்ளிமந்தையம் | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, மில்லர் மண்டேலா |
| 3 | 17.05.2025 | வேலூர் | வேலூர் | அண்ணா கலையரங்கம் அருகில் | வழக்கறிஞர் தாயகம் கவி, ரிஷி சந்தோஷ் |
| 4 | 18.05.2025 | வேலூர் | குடியாத்தம் | பேரணாம்பட்டு பேருந்து நிலையம் அருகில் | மாண்புமிகு கோவி.செழியன், ம.ஜ.சந்தீப் |
| 5 | 18.05.2025 | நீலகிரி | உதகை | கூக்கல்தொரை | மருத்துவர் ப.மீ.யாழினி, சி.கா.சுகன்மந்த்ரன் |

### ஒன்றிய–நகர–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

தேனி தெற்கு மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 15.05.2025 வியாழக்கிழமை | காலை 10.00 மணி | இராமநாதபுரம் | பீமாஸ் வைஸ்ராய் ஹால், பாரதி நகர், இராமநாதபுரம். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 10-05-2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி